$L.H.S = \tan\theta + \cot\theta = \dfrac{\sin\theta}{\cos\theta} + \dfrac{\cos\theta}{\sin\theta} = \dfrac{\sin^2\theta + \cos^2\theta}{\cos\theta\sin\theta}$

$= \dfrac{1}{\cos\theta\sin\theta}$ [1ஐப் பயன்படுத்தி]

$= \dfrac{1}{1} = 1 = R.H.S.$ எனவே நிரூபிக்கப்பட்டது.

(ii) கொடுக்கப்பட்ட $\sqrt{3}\sin\theta - \cos\theta = 0$

$\Rightarrow \quad \sqrt{3}\sin\theta = \cos\theta$

இருபுறமும் $\cos\theta$ ஆல் வகுக்க

$\dfrac{\sqrt{3}\sin\theta}{\cos\theta} = \dfrac{\cos\theta}{\cos\theta}$

$\dfrac{\sqrt{3}\sin\theta}{\cos\theta} = 1 \Rightarrow \dfrac{\sin\theta}{\cos\theta} = \dfrac{1}{\sqrt{3}}$

$\therefore \tan\theta = \dfrac{1}{\sqrt{3}} \Rightarrow \theta = 30^\circ$ $\left[\because \tan 30 = \dfrac{1}{\sqrt{3}}\right]$

$L.H.S = \tan 3\theta = \tan(3 \times 30) = \tan 90 = \infty$

$R.H.S = \dfrac{3\tan\theta - \tan^3\theta}{1 - 3\tan^2\theta}$

$\tan\theta = \dfrac{1}{\sqrt{3}}$ என பிரதியிட கிடைப்பது

$RHS = \dfrac{3\times\frac{1}{\sqrt{3}} - \left(\frac{1}{\sqrt{3}}\right)^3}{1 - 3\times\frac{1}{3}} = \dfrac{\sqrt{3} - \frac{1}{3\sqrt{3}}}{1-1} = \dfrac{\frac{9-1}{3\sqrt{3}}}{0} = \dfrac{\frac{8}{3\sqrt{3}}}{0} = \infty$ ..(2)

$\therefore (1) = (2)$ $\left[\because \dfrac{\text{எந்த எண்}}{0} = \infty\right]$

$\therefore L.H.S = R.H.S$

எனவே நிரூபிக்கப்பட்டது.

**8. (i) $\dfrac{\cos\alpha}{\cos\beta} = m$ மற்றும் $\dfrac{\cos\alpha}{\sin\beta} = n$, எனக் கொண்டு $(m^2 + n^2)\cos^2\beta = n^2$ என்பதை நிரூபிக்கவும்.**

**(ii) $\cot\theta + \tan\theta = x$ மற்றும் $\sec\theta - \cos\theta = y$ எனில், $(x^2y)^{\frac{2}{3}} - (xy^2)^{\frac{2}{3}} = 1$ என்பதை நிரூபிக்கவும்.**

**தீர்வு :** (i) கொடுக்கப்பட்ட $m = \dfrac{\cos\alpha}{\cos\beta}$, $n = \dfrac{\cos\alpha}{\sin\beta}$

கருது

$LHS = (m^2 + n^2)\cos^2\beta$

$= \left[\left(\dfrac{\cos\alpha}{\cos\beta}\right)^2 + \left(\dfrac{\cos\alpha}{\sin\beta}\right)^2\right]\cos^2\beta$

$= \left[\left(\dfrac{\cos^2\alpha}{\cos^2\beta}\right) + \left(\dfrac{\cos^2\alpha}{\sin^2\beta}\right)\right]\cos^2\beta$

$= \left(\dfrac{\cos^2\alpha}{\cos^2\beta} + \dfrac{\cos^2\alpha}{\sin^2\beta}\right)\times\cos^2\beta$

$= \left(\dfrac{\cos^2\alpha\sin^2\beta + \cos^2\alpha\cos^2\beta}{\cos^2\beta\cdot\sin^2\beta}\right)\cos^2\beta$

$= \dfrac{\cos^2\alpha\sin^2\beta + \cos^2\alpha\cos^2\beta}{\sin^2\beta}$

$= \dfrac{\cos^2\alpha\sin^2\beta}{\sin^2\beta} + \dfrac{\cos^2\alpha\cos^2\beta}{\sin^2\beta}$

$= \cos^2\alpha + \dfrac{\cos^2\alpha(1 - \sin^2\beta)}{\sin^2\beta}$

$[\because \cos^2\beta = 1 - \sin^2\beta]$

$= \cos^2\alpha + \dfrac{\cos^2\alpha - \cos^2\alpha\sin^2\beta}{\sin^2\beta}$

$= \cos^2\alpha + \dfrac{\cos^2\alpha}{\sin^2\beta} - \dfrac{\cos^2\alpha\sin^2\beta}{\sin^2\beta}$

$= \cos^2\alpha + \dfrac{\cos^2\alpha}{\sin^2\beta} - \cos^2\alpha = \dfrac{\cos^2\alpha}{\sin^2\beta} = \left(\dfrac{\cos\alpha}{\sin\beta}\right)^2$

$= n^2 = RHS$ எனவே நிரூபிக்கப்பட்டது.

orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



(ii) கொடுக்கப்பட்ட $x = \cot\theta + \tan\theta = \frac{\cos\theta}{\sin\theta} + \frac{\sin\theta}{\cos\theta}$

$$= \frac{\cos^2\theta + \sin^2\theta}{\cos\theta\sin\theta} = \frac{1}{\sin\theta\cos\theta}$$

$$y = \sec\theta - \cos\theta = \frac{1}{\cos\theta} - \cos\theta = \frac{1-\cos^2\theta}{\cos\theta} = \frac{\sin^2\theta}{\cos\theta}$$

$$\therefore x^2y = \frac{1}{\sin^2\theta\cos^2\theta} \times \frac{\sin^2\theta}{\cos\theta} = \frac{1}{\cos^3\theta}$$

$$xy^2 = \frac{1}{\sin\theta\cos\theta} \times \frac{\sin^4\theta}{\cos^2\theta} = \frac{\sin^3\theta}{\cos^3\theta}$$

$$(x^2y)^{\frac{2}{3}} = \left(\frac{1}{\cos^3\theta}\right)^{\frac{2}{3}} = \frac{1}{\cos^{3\times\frac{2}{3}}\theta} = \frac{1}{\cos^2\theta}$$

$$(xy^2)^{\frac{2}{3}} = \left(\frac{\sin^3\theta}{\cos^3\theta}\right)^{\frac{2}{3}} = \frac{\sin^2\theta}{\cos^2\theta}$$

$$\text{LHS} = \frac{1}{\cos^2\theta} - \frac{\sin^2\theta}{\cos^2\theta} = \frac{1-\sin^2\theta}{\cos^2\theta} = \frac{\cos^2\theta}{\cos^2\theta} = 1 = \text{R.H.S}$$

**9. (i) $\sin\theta + \cos\theta = p$ மற்றும் $\sec\theta + \text{cosec}\,\theta = q$ எனில், $q(p^2-1) = 2p$ என்பதை நிரூபிக்கவும்.** **[Qy - 2019]**

**(ii) $\sin\theta\ (1 + \sin^2\theta) = \cos^2\theta$ எனில், $\cos^6\theta - 4\cos^4\theta + 8\cos^2\theta = 4$ என்பதை நிரூபிக்கவும்.**

**தீர்வு :** (i) கொடுக்கப்பட்ட $p = \sin\theta + \cos\theta$

$$\Rightarrow p^2 = (\sin\theta + \cos\theta)^2$$

$$p^2 = \underbrace{\sin^2\theta + \cos^2\theta}_{1} + 2\sin\theta\cos\theta$$

$$\Rightarrow p^2 = 1 + 2\sin\theta\cos\theta \quad \text{... (1)}$$

$$p^2 - 1 = 2\sin\theta\cos\theta$$

கொடுக்கப்பட்ட $q = \sec\theta + \text{cosec}\,\theta = \frac{1}{\cos\theta} + \frac{1}{\sin\theta}$

$$= \frac{\sin\theta + \cos\theta}{\sin\theta\cos\theta}$$

$$\therefore \text{L.H.S} = q(p^2-1) = \frac{\sin\theta+\cos\theta}{\sin\theta\cos\theta} \times 2\sin\theta\cos\theta$$

[(1)ஐ பயன்படுத்தி]

$= 2(\sin\theta + \cos\theta) = 2p = \text{R.H.S}$

(ii) கொடுக்கப்பட்ட $\sin\theta\ (1 + \sin^2\theta) = \cos^2\theta$ ...(1)

(1) -ன் இருபுறமும் வர்க்கப்படுத்த கிடைப்பது

$$\sin^2\theta\,(1 + \sin^2\theta)^2 = \cos^4\theta$$

$$(1 - c^2)\,(1 + 1 - c^2)^2 = c^4$$

$$(1 - c^2)\,(2 - c^2)^2 = c^4$$

[$\because \sin^2\theta = 1 - \cos^2\theta$ மற்றும் $\cos\theta = c$ என பிரதியிடு]

$$(1 - c^2)\,(4 + c^4 - 4c^2) = c^4$$

$$4 + c^4 - 4c^2 - 4c^2 - c^6 + 4c^4 = c^4$$

$$-c^6 + 4c^4 - 8c^2 = -4$$

$$c^6 - 4c^4 + 8c^2 = 4\ [\because c = \cos\theta]$$

$$\Rightarrow \cos^6\theta - 4\cos^4\theta + 8\cos^2\theta = 4 = \text{R.H.S}$$

∴ எனவே நிரூபிக்கப்பட்டது.

**10. $\frac{\cos\theta}{1+\sin\theta} = \frac{1}{a}$ எனில், $\frac{a^2-1}{a^2+1} = \sin\theta$ என்பதை நிரூபிக்கவும்.**

**தீர்வு :** $\frac{\cos\theta}{1+\sin\theta} = \frac{1}{a}$ $\quad \therefore a = \frac{1+\sin\theta}{\cos\theta}$

நிரூபிக்க வேண்டியது $\frac{a^2-1}{a^2+1} = \sin\theta$

இடப்பக்கம் $= \frac{a^2-1}{a^2+1}$

$$= \frac{\left(\frac{1+\sin\theta}{\cos\theta}\right)^2 - 1}{\left(\frac{1+\sin\theta}{\cos\theta}\right)^2 + 1} = \frac{\frac{1^2+\sin^2\theta+2\sin\theta}{\cos^2\theta} - 1}{\frac{1^2+\sin^2\theta+2\sin\theta}{\cos^2\theta} + 1}$$

$$= \frac{\frac{1+\sin^2\theta+2\sin\theta-\cos^2\theta}{\cos^2\theta}}{\frac{1+\sin^2\theta+2\sin\theta+\cos^2\theta}{\cos^2\theta}}$$

$$= \frac{(1-\cos^2\theta)+\sin^2\theta+2\sin\theta}{\cos^2\theta} \times \frac{\cos^2\theta}{1+(\sin^2\theta+\cos^2\theta)+2\sin\theta}$$

$$= \frac{\sin\theta + \sin^2\theta + 2\sin\theta}{1+1+2\sin\theta} \qquad \left[\begin{array}{l}\because \sin^2\theta + \cos^2\theta = 1 \\ 1 - \cos^2\theta = \sin^2\theta\end{array}\right]$$

$$= \frac{2\sin^2\theta + 2\sin\theta}{2+2\sin\theta} = \frac{2\sin\theta(\sin\theta+1)}{2(1+\sin\theta)}$$

$= \sin\theta$ = வலப்பக்கம்

## பயிற்சி 6.2

**1. $10\sqrt{3}$ மீ உயரமுள்ள கோபுரத்தின் அடியிலிருந்து 30 மீ தொலைவில் தரையில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து கோபுரத்தின் உச்சியின் ஏற்றக் கோணத்தைக் காண்க.**

**[Hy - 2019; பிடிஏ - 2; செப். - 2021]**

**தீர்வு :**




orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or
Availablve at All Leading Bookstores



## அலகுத் தேர்வு

**நேரம் : 45 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

### பகுதி - A $5 \times 1 = 5$

**1.** $\tan\theta \operatorname{cosec}^2\theta - \tan\theta$ is equal to

(அ) $\sec\theta$ (ஆ) $\cot^2\theta$
(இ) $\sin\theta$ (ஈ) $\cot\theta$

**2.** $\sin\theta + \cos\theta = a$ மற்றும் $\sec\theta + \operatorname{cosec}\theta = b$, எனில் $b(a^2 - 1)$ -ன் மதிப்பு

(அ) $2a$ (ஆ) $3a$ (இ) $0$ (ஈ) $2ab$

**3.** இரண்டு நபர்களுக்கு இடைப்பட்ட தொலைவு $x$ மீ ஆகும். முதல் நபரின் உயரமானது இரண்டாவது நபரின் உயரத்தைப் போல இரு மடங்காக உள்ளது. அவர்களுக்கு இடைப்பட்ட தொலைவு நேர்கோட்டின் மையப் புள்ளியிலிருந்து இரு நபர்களின் உச்சியின் ஏற்றக் கோணங்கள் நிரப்புக்கோணங்கள் எனில், குட்டையாக உள்ள நபரின் உயரம் (மீட்டரில்) காண்க.

(அ) $\sqrt{2}x$ (ஆ) $\dfrac{x}{2\sqrt{2}}$ (இ) $\dfrac{x}{\sqrt{2}}$ (ஈ) $2x$

**4.** ஒரு கோபுரத்தின் உயரத்திற்கும் அதன் நிழலின் நீளத்திற்கும் உள்ள விகிதம் $\sqrt{3} : 1$, எனில் சூரியனைக் காணும் ஏற்றக் கோண அளவானது

(அ) $45^\circ$ (ஆ) $30^\circ$ (இ) $90^\circ$ (ஈ) $60^\circ$

**5.** ஓர் ஏரியின் மேலே $h$ மீ உயரத்தில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து மேகத்திற்கு உள்ள ஏற்றக்கோணம் $\beta$. மேக பிம்பத்தின் இறக்கக் கோணம் $45^\circ$ எனில், ஏரியில் இருந்து மேகத்திற்கு உள்ள உயரமானது.

(அ) $\dfrac{h(1+\tan\beta)}{1-\tan\beta}$ (ஆ) $\dfrac{h(1-\tan\beta)}{1+\tan\beta}$

(இ) $h\tan(45^\circ - \beta)$ (ஈ) இவை ஏதுமில்லை

### பகுதி - B $5 \times 2 = 10$

**1.** பின்வரும் முற்றொருமைகளை நிரூபிக்கவும்.

(i) $\sec^6\theta = \tan^6\theta + 3\tan^2\theta \sec^2\theta + 1$

(ii) $(\sin\theta + \sec\theta)^2 + (\cos\theta + \operatorname{cosec}\theta)^2 = 1 + (\sec\theta + \operatorname{cosec}\theta)^2$

**2.** '$r$' மீ ஆரம் கொண்ட அரைக்கோளக் குவிமாடத்தின் மீது '$h$' மீ உயரமுள்ள ஒரு கொடிக்கம்பம் நிற்கிறது. குவிமாடத்தின் அடியிலிருந்து 7 மீ தொலைவில் ஒருவர் நிற்கிறார். அவர் கொடிக்கம்பத்தின் உச்சியை $45^\circ$ ஏற்றக் கோணத்திலும் நிற்குமிடத்திலிருந்து மேலும் 5 மீ தொலை விலகிச் சென்று கொடிக்கம்பத்தின் அடியை $30^\circ$ ஏற்றக் கோணத்திலும் பார்க்கிறார் எனில், (i) கொடிக்கம்பத்தின் உயரம் (ii) அரைக் கோளக் குவிமாடத்தின் ஆரம் ஆகியவற்றைக் காண்க.




**3.** இரண்டு கட்டடங்களுக்கு இடைப்பட்ட கிடைமட்டத் தொலைவு 70 மீ ஆகும். இரண்டாவது கட்டடத்தின் உச்சியிலிருந்து முதல் கட்டடத்தின் உச்சிக்கு உள்ள இறக்கக்கோணம் $45^\circ$ ஆகும். இரண்டாவது கட்டடத்தின் உயரம் 120 மீ எனில் முதல் கட்டடத்தின் உயரத்தைக் காண்க.

**4.** $x\sin^3\theta + y\cos^3\theta = \sin\theta\cos\theta$ மற்றும் $x\sin\theta = y\cos\theta$ எனில், $x^2 + y^2 = 1$ என நிரூபிக்கவும்.

**5.** 90அடி உயரமுள்ள கட்டத்தின் மேலிருந்து ஒளி ஊடுருவும் கண்ணாடிச் சுவர் கொண்ட மின் தூக்கியானது கீழ் நோக்கி வருகிறது. கட்டடத்தின் உச்சியில் மின் தூக்கி இருக்கும் போது பூந்தோட்டத்தில் உள்ள ஒரு நீரூற்றின் இறக்கக்கோணம் $60^\circ$ ஆகும். இரண்டு நிமிடம் கழித்து அதன் இறக்கக்கோணம் $30^\circ$ ஆக குறை கிறது. மின்தூக்கியின் நுழைவு வாயிலிருந்து நீரூற்று $30\sqrt{3}$ அடி தொலைவில் உள்ளது எனில் மின்தூக்கி கீழே வரும் வேகத்தைக்காண்க.

### பகுதி - C $2 \times 5 = 10$

**1.** முற்றொருமைகளை நிருவுக.

(i) $\dfrac{1-\tan^2\theta}{\cot^2\theta - 1} = \tan^2\theta$

(ii) $\dfrac{\cos\theta}{1+\sin\theta} = \sec\theta - \tan\theta$

**2.** 80 மீ உயரமுள்ள மரத்தின் உச்சியில் ஒரு பறவை இருக்கிறது. தரையில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து பறவையின் ஏற்றக்கோணம் $45^\circ$. பறவை ஒரே உயரத்தில் கிடைமட்டத்தில் பறந்து செல்கிறது. 2 வினாடிகள் கழித்து அதே புள்ளியிலிருந்து பறவையின் ஏற்றக்கோணம் $30^\circ$ எனில், பறவை பறக்கும் வேகத்தினைக் காண்க. ($\sqrt{3} = 1.732$)

orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores

அத்தியாயம் 7

# அளவியல்

## நினைவில் கொள்ள வேண்டிய சூத்திரங்கள்

- நேர்வட்ட உருளையின் வளைபரப்பு = $2\pi rh$ சதுர அலகுகள்
- நேர்வட்ட உருளையின் மொத்தப் புறப்பரப்பு = $2\pi r(h+r)$ சதுர அலகுகள்
- உள்ளீடற்ற உருளையின் வளைபரப்பு = $2\pi\ \mathrm{R}h + 2\pi rh$.
- நேர்வட்டக் கூம்பின் வளைபரப்பு = $\pi rl$.
- நேர்வட்டக் கூம்பின் மொத்தப் புறப்பரப்பு = $\pi r(l + r)$.
- அரைக்கோளத்தின் வளைபரப்பு = $2\pi r^2$.
- அரைக்கோளத்தின் மொத்தப் புறப்பரப்பு = $3\pi r^2$ .
- உள்ளீடற்ற அரைக்கோளத்தின் வளைபரப்பு = $2\pi(\mathrm{R}^2 + r^2)$.
- நேர்வட்டக் கூம்பின் இடைக்கண்டத்தின் வளைபரப்பு = $\pi(\mathrm{R} + r)l$.
- நேர்வட்டக் கூம்பின் இடைக்கண்டத்தின் மொத்தப் புறப்பரப்பு = $\pi(\mathrm{R} + r)l + \pi\mathrm{R}^2 + \pi r^2$.



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



## பயிற்சி 7.1

**1. ஓர் உருளையின் ஆரம் மற்றும் உயரங்களின் விகிதம் 5:7 ஆகும். அதன் வளைபரப்பு 5500 ச.செ.மீ எனில், உருளையின் ஆரம் மற்றும் உயரம் காண்க.**

**தீர்வு :** கொடுக்கப்பட்ட $r : h = 5 : 7$

$r = 5x$ மற்றும்

$h = 7x$

உருளையின் வளைபரப்பு $= 2\pi rh$

$\therefore 5500 = 2 \times \frac{22}{7} \times 5x \times 7x$

$220x^2 = 5500$

$x^2 = \frac{550}{22} = 25$

$\therefore x = 5$

$\therefore$ உருளையின் ஆரம் $= 5 \times 5 = 25$ செ.மீ

[$\because r = 5x$ மற்றும் $x = 5$]

உயரம் $= 7 \times 5 = 35$ செ.மீ

**2. ஒரு திண்ம இரும்பு உருளையின் மொத்தப் புறப்பரப்பு 1848 ச.மீ மேலும் அதன் வளைபரப்பு, மொத்தப் புறப்பரப்பில் ஆறில் ஐந்து பங்காகும் எனில், இரும்பு உருளையின் ஆரம் மற்றும் உயரம் காணவும்.**

**தீர்வு :** உருளையின் வளைபரப்பு $= \frac{5}{6}$ உருளையின் மொத்தப்பரப்பு

மொத்தப் பரப்பு $= 1848$ மீ$^2$

$2\pi r(h + r) = 1848$ மீ$^2$

$2\pi rh + 2\pi r^2 = 1848$ மீ$^2$

$\frac{5}{6} \times 1848 + 2\pi r^2 = 1848$

[$\because 2\pi rh = \frac{5}{6} \times$ மொத்தப் பரப்பு]

$1540 + 2\pi r^2 = 1848$

$2\pi r^2 = 1848 - 1540 = 308$

$2 \times \frac{22}{7} \times r^2 = 308$

$\Rightarrow r^2 = 308 \times \frac{1}{2} \times \frac{7}{22}$

$\Rightarrow r^2 = 49$

$\Rightarrow r = 7$ மீ.

$2\pi rh = \frac{5}{6} \times 1848$

$2 \times \frac{22}{7} \times 7 \times h = \frac{5}{6} \times 1848$

$\Rightarrow h = 35$ மீ

$\therefore$ ஆரம் $r = 7$ மீ, உயரம் $= 35$ மீ.

**3. ஓர் உள்ளீடற்ற மர உருளையின் வெளிப்புற ஆரம் மற்றும் நீளம் முறையே 16 செ.மீ மற்றும் 13 செ.மீ ஆகும். அதன் தடிமன் 4 செ.மீ எனில் உருளையின் மொத்தப் புறப்பரப்பு எவ்வளவு?**

**தீர்வு :** கொடுக்கப்பட்ட R = 16 செ.மீ $r$ = R – தடிமன்

$h = 13$ செ.மீ $= 16 - 4 = 12$ செ.மீ

தடிமன் $= 4$ செ.மீ $\Rightarrow r = 12$ செ.மீ

உள்ளீடற்ற உருளையின் மொத்தப்பரப்பு $= 2\pi(R + r)(R - r + h)$ சதுர அலகுகள்

மொத்த பரப்பு $= 2 \times \frac{22}{7}(16 + 12)(16 - 12 + 13)$

$= \frac{44}{7}\left(\overset{4}{28}\right)(17)$

மொத்தப்புறப்பரப்பு $= 2992$ ச.செ.மீ $^2$

**4. PQR என்ற செங்கோண முக்கோணத்தில் QR = 16 செ.மீ, PR = 20 செ.மீ மற்றும் ∠Q = 90° ஆகும். QR மற்றும் PQ -ஐ மைய அச்சுகளாகக் கொண்டு சுழற்றும் போது உருவாகும் கூம்பு களின் வளைபரப்புகளை ஒப்பிடுக.**

**தீர்வு :** PQ வை மைய அச்சாக கொண்டு சுழற்றும் போது உருவாகும் கூம்பின் வளைபரப்பு $= \pi rl$.

[இங்கு $r = 16$, $l = 20$]

$= \frac{22}{7} \times 16 \times 20$

$= \frac{7040}{7}$

$= 1005.71$ செ.மீ$^2$




QR ஐ மைய அச்சாகக் கொண்டு சுழற்றும் போது கூம்பின் வளைபரப்பு.

$= \pi rl.$ [இங்கு $h = 16$, $l = 20$]

இங்கு $r = \sqrt{l^2 - h^2} = \sqrt{20^2 - 16^2}$

$= \sqrt{400 - 256} = \sqrt{144} = 12$ செ.மீ

வளைபரப்பு $= \pi rl = \frac{22}{7} \times 12 \times 20$

$= \frac{5280}{7} = 754.28$ செ.மீ$^2$.

$1005.71 > 754.28$.

எனவே, PQ யை பொருத்து சுழற்றும் போது கூம்பின் புறப்பரப்பு அதிகமாக இருக்கும்.

**5. சாயுயரம் 19 மீ கொண்ட கூம்பு வடிவக் கூடாரத்தில் நால்வர் உள்ளனர். ஒருவருக்கு 22 ச.மீ பரப்பு தேவை எனில், கூடாரத்தின் உயரத்தைக் கணக்கிடவும்.**

**தீர்வு :** கொடுக்கப்பட்ட $l = 19$ மீ

கூம்பின் அடிப்பரப்பு $= \pi r^2$ சதுர அலகுகள்

www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



$\pi r^2 = 4 \times 22$ மீ$^2$ ⇒ $\frac{22}{7} \times r^2 = 88$

[∵ 4 நபர்களுக்கான பரப்பளவு = 4 × 22]

$r^2 = 8\cancel{8}^{4} \times \frac{7}{2\cancel{2}}$

$= \frac{616}{22} = 28$ மீ$^2$




$l = 19$ மீ

$h = \sqrt{l^2 - r^2}$

[∵ $l^2 = h^2 + r^2$]

$= \sqrt{19^2 - 28}$

$= \sqrt{361 - 28}$

$= \sqrt{333}$

$h = 18.25$ மீ

**குறிப்பு :**

| | |
|---|---|
| | 18.2 |
| 1 | 33300 |
| | 1 |
| 28 × 8 | 233 |
| | 224 |
| 362 × 2 | 900 |
| | 724 |
| 3645×5 | 17600 |

எனவே கூம்பின் உயரம் = 18.25 மீ.

**6. ஒரு சிறுமி தனது பிறந்த நாளைக் கொண்டாடக் கூம்பு வடிவத் தொப்பிகளை 5720 ச.செ.மீ பரப்புள்ள காகிதத்தாளை பயன்படுத்தித் தயாரிக்கிறாள். 5 செ.மீ ஆரமும், 12 செ.மீ உயரமும் கொண்ட எத்தனை தொப்பிகள் தயாரிக்க முடியும்?**

**தீர்வு :** $r = 5$ செ.மீ

$h = 12$ செ.மீ

⇒ $l = \sqrt{r^2 + h^2}$ ⇒ $l = \sqrt{25 + 144}$

⇒ $l = \sqrt{169}$ ⇒ $l = 13$ செ.மீ

தேவையான தொப்பிகள் = $\frac{\text{காகிதத்தின் பரப்பு}}{\text{1 தொப்பியின் பரப்பு}}$

$= \frac{5720}{\pi r l} = \frac{5720}{\frac{22}{7} \times 5 \times 13}$

ஒரு தொப்பியின் பரப்பு = $\frac{22}{7} \times 5 \times 13$

$= \frac{5720}{\frac{1430}{7}} = 572\cancel{0} \times \frac{7}{143\cancel{0}} = \frac{4004}{143}$

$= 28$ தொப்பிகள்

எனவே 28 தொப்பிகள் தயாரிக்க முடியும்.

**7. சம உயரங்களையுடைய இரு நேர்வட்டக் கூம்புகளின் ஆரங்கள் 1:3 என்ற விகிதத்தில் உள்ளன. கூம்புகளின் உயரம் சிறிய கூம்பின் ஆரத்தின் மூன்று மடங்கு எனில், வளைபரப்புகளின் விகிதம் காண்க.** [பிடிஏ - 2]

**தீர்வு :** $r_1$ , $r_2$ நேர்வட்டக் கூம்புகளின் ஆரங்கள் மற்றும் உயரங்கள் முறையே $h_1$, $h_2$.

கொடுக்கப்பட்ட $r_1 : r_2 = 1 : 3 \Rightarrow r_1 = 1(x)$ மற்றும் $r_2 = 3(x)$ இங்கு $x$ என்பது ஒரு மிகை எண்.

இங்கு $r_1 = x$ என்பது சிறிய கூம்பின் ஆரம் ... (1)

மேலும், கொடுக்கப்பட்ட $h_1 = 3$ (சிறிய கூம்பின் ஆரம்) மற்றும் $h_2 = 3$ (சிறிய கூம்பின் ஆரம்)

⇒ $h_1 = 3x$ மற்றும் $h_2 = 3x$ [(1) ஐ பயன்படுத்தி]

இங்கு $l_1$, $l_2$ நேர்வட்டக் கூம்பின் சாயுரம் என்க.

$l_1 = \sqrt{h_1^2 + r_1^2} = \sqrt{(3x)^2 + x^2} = \sqrt{9x^2 + x^2}$

$= \sqrt{10x^2} = x\sqrt{10}$ மற்றும் $l_2 = \sqrt{h_2^2 + r_2^2}$

$= \sqrt{9x^2 + 9x^2} = \sqrt{18x^2} = \sqrt{9 \times 2 \times x^2}$

⇒ $l_2 = 3x\sqrt{2}$

$CSA_1$ மற்றும் $CSA_2$ முறையே வளைபரப்புகள் என்க.

$\therefore CSA_1 = \pi r_1 l_1 = \pi (x)(x)\sqrt{10} = \pi x^2 \sqrt{10}$ ... (3)

மற்றும் $CSA_2 = \pi r_2 l_2 = \pi (3x)(3x\sqrt{2}) = 9x^2\pi\sqrt{2}$ ... (4)

∴ CSA இரண்டு நேர்வட்டக் கூம்பின் வளைபரப்பின் விகிதங்கள்.

$\frac{CSA_1}{CSA_2} = \frac{\cancel{\pi}\,\cancel{x^2}\sqrt{10}}{9\cancel{x^2}\,\cancel{\pi}\sqrt{2}}$

[(3)ஐ (4)ஆல் வகுக்க]

$= \frac{\sqrt{10}}{9\sqrt{2}} = \frac{\cancel{\sqrt{2}} \times \sqrt{5}}{9 \times \cancel{\sqrt{2}}} = \frac{\sqrt{5}}{9}$

⇒ $CSA_1 : CSA_2 = \sqrt{5} : 9$

**8. ஒரு கோளத்தின் ஆரம் 25% அதிகரிக்கும் போது, அதிகமாகும் புறப்பரப்பின் சதவீதம் காண்க.** [அ.மா.வி - 2019]

**தீர்வு :** $r$ ஆரம் மற்றும் $r'$ புதிய கோளத்தின் ஆரம் என்க.

$r' = r + 25\%r$

[∵ ஆரம் அதிகரிக்கப்பட்டதால் 25%]

$r' = r + \frac{25}{100}r = r + 0.25r$

$= r(1 + 0.25) = 1.25\,r$

பழைய புறப்பரப்பு = $4\pi r^2$

புதிய புறப்பரப்பு = $4\pi(r')^2$ ... (1)

$= 4\pi(1.25r)^2 = 4\pi(1.25)(1.25)r^2$

$= 4(1.5625)r^2$ ... (2)

புறப்பரப்பின் மாற்றம் = $4\pi(1.5625)r^2 - 4\pi r^2$

[(2) – (1)]

orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



$= 4\pi r^2 (1.5625 - 1)$

[$4\pi r^2$ ஐ பொதுவில் எடுக்க]

$= 4\pi r^2 (0.5625)$

∴ புறப்பரப்பில் அதிகரிப்பு சதவீதம்

$= \dfrac{\text{புறப்பரப்பின் மாற்றம்} \times 100}{\text{பழைய பரப்பு}}$

$= \dfrac{4\pi r^2 (.5625) \times 100}{4\pi r^2} = 0.5625 \times 100 = 56.25\%$

எனவே புறப்பரப்பின் சதவீத அதிகரிப்பு = 56.25%

**9. உள்ளீடற்ற ஓர் அரைக்கோள வடிவக் கிண்ணத்திற்கு ஒரு சதுர செ.மீ-க்கு வர்ணம் பூச ₹ 0.14 வீதம் செலவாகும். அதன் உட்புற மற்றும் வெளிப்புற விட்டங்கள் முறையே 20 செ.மீ மற்றும் 28 செ.மீ எனில், அதனை முழுமையாக வர்ணம் பூச எவ்வளவு செலவாகும்?**

**தீர்வு :** வெளி விட்டம் D = 28 செ.மீ

உள் விட்டம் $d$ = 20 செ.மீ

$\therefore R = \dfrac{28}{2} = 14$ செ.மீ, $r = \dfrac{20}{2} = 10$ செ.மீ.

அரைக்கோளக் கிண்ணத்தின் மொத்தப்பரப்பு

$= \pi(3R^2 + r^2) = \dfrac{22}{7}(3 \times 14^2 + 10^2)$




$= \dfrac{22}{7}(3 \times 196 + 100) = \dfrac{22}{7} \times 688$

$= \dfrac{15136}{7} = 2162.28$ செ.மீ $^2$

1 செ.மீ$^2$ வர்ணம் பூச ஆகும் செலவு ₹ 0.14 எனில்

2162.28 செ.மீ$^2$ வர்ணம் பூச ஆகும் செலவு

$= 2162.28 \times 0.14 =$ ₹ 302.72

**10. ஒரு மேஜை விளக்கின் வெளிப்புறத்திற்கு (மேல் பகுதியுடன்) மட்டும் வர்ணம் பூசப்படுகிறது. 1 ச.செ.மீ வர்ணம் பூச ₹2 செலவாகுமெனில் விளக்கிற்கு வர்ணம் பூசுவதற்கான மொத்தச்செலவைக் கணக்கிடுக.**

**தீர்வு :** கொடுக்கப்பட்டுள்ள R = 12 செ.மீ

$r$ = 6 செ.மீ

$h$ = 8 செ.மீ




$l = \sqrt{h^2 + (R-r)^2}$

$= \sqrt{8^2 + (12-6)^2}$

$= \sqrt{8^2 + 6^2} = \sqrt{64+36}$

$l = \sqrt{100} = 10$ செ.மீ

∴ மேஜை விளக்கின் வெளிப்புறப்பரப்பு

$= \pi(R + r)l$

$= \dfrac{22}{7}(12 + 6)10 = \dfrac{220}{7} \times 18$

$= \dfrac{3960}{7} = 565.71$ செ.மீ $^2$ ... (1)

மேல் பாகத்தின் பரப்பு $= \pi r^2$

$= \dfrac{22}{7} \times 6 \times 6$

$= \dfrac{792}{7} = 113.14$ மீ$^2$ ... (2)

∴ வர்ணம் பூச வேண்டிய பரப்பு

$= 565.71 + 113.14$ [(1) + (2)]

$= 678.85$ செ.மீ$^2$

1 ச.செ.மீ$^2$ வர்ணம் பூச ஆகும் செலவு ₹ 2 எனில், 678.85 செ.மீ$^2$ வர்ணம் பூச ஆகும் செலவு $2 \times 678.85$ = ₹ 1357.72

எனவே விளக்கிற்கு வர்ணம் பூசுவதற்கான மொத்தச் செலவு = ₹ 1357.72

## பயிற்சி 7.2

**1. 10 மீ உட்புற விட்டம் மற்றும் 14 மீ ஆழம் கொண்ட ஓர் உருளை வடிவக் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட மண் கொண்டு 5 மீ அகலத்தில் கிணற்றைச் சுற்றி மேடை அமைக்கப்படுகிறது. எனில், மேடையின் உயரத்தைக் காண்க.**

**தீர்வு :** கொடுக்கப்பட்ட உட்புற விட்டம் = 10 மீ




⇒ உட்புற ஆரம் $= \dfrac{10}{2} = 5$ மீ

மற்றும் உயரம் ($h$) = 14 மீ

உருளையின் கொள்ளளவு = எடுக்கப்பட்ட மண்ணின் கொள்ளளவு

$= \pi r^2 h = \dfrac{22}{7} \times 5 \times 5 \times 14 = 1100$ மீ$^3$ ... (1)

கிணற்றை சுற்றி மேடை அமைக்கப்படுகிறது.

= உள்ளீடற்ற உருளையின் கன அளவு $= \pi (R^2 - r^2)$

வெளிபுற ஆரம் (R) = உட்புற ஆரம் + அகலம் = 5 + 5 = 10மீ

$r$ = 5மீ

மற்றும் $h$ = ? [கொடுக்கப்படவில்லை]

∴ கிணற்றை சுற்றி மேடை அமைக்கப்படுகிறது.

$= \dfrac{22}{7}(10^2 - 5^2) = \dfrac{22}{7}(100 - 25)\,h$

$= \dfrac{22}{7} \times 75 \times h$ ... (2)

மேலும் கொடுக்கப்பட்ட மண் கொண்டு = கிணற்றை சுற்றி மேடை அமைக்கப்படுகிறது.

(1) மற்றும் (2) சமப்படுத்த கிடைப்பது,

orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores

அத்தியாயம் 8

# புள்ளியியலும் நிகழ்தகவும்

## நினைவில் கொள்ள வேண்டியவை

- வீச்சு R = L – S.
- வீச்சுக் கெழு = $\frac{L - S}{L + S}$, L - மிகப் பெரிய மதிப்பு S-சிறிய மதிப்பு
- திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\sum_{i=1}^{n}(x_i - \bar{x})^2}{n}}$.
- விலக்க வர்க்க சராசரி $\sigma^2 = \frac{\sum_{i=1}^{n}(x_1 - \bar{x})^2}{n}$
- வடிவிலக்க முறை $\sigma = c \times \sqrt{\frac{\sum d_i^2}{n} - \left(\frac{\sum d_i}{n}\right)^2}$



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



## பயிற்சி 8.1

**1. கீழ்க்காணும் தரவுகளுக்கு வீச்சு மற்றும் வீச்சுக் கெழுவைக் காண்க.**
**(i) 63, 89, 98, 125, 79, 108, 117, 68**
**(ii) 43.5, 13.6, 18.9, 38.4, 61.4, 29.8**

**தீர்வு:** வீச்சு R = L – S.

வீச்சின் கெழு $= \dfrac{L-S}{L+S}$

L – மீப்பெரு மதிப்பு, S – மீச்சிறு மதிப்பு

(i) 63, 89, 98, 125, 79, 108, 117, 68.

இங்கு மீப்பெரு மதிப்பு L = 125

மீச்சிறு மதிப்பு S = 63

∴ R = L – S = 125 – 63 = 62

வீச்சுக் கெழு (அ) குணகம் $= \dfrac{L-S}{L+S} = \dfrac{125-63}{125+63}$

$= \dfrac{62}{188} = 0.33$

(ii) 43.5, 13.6, 18.9, 38.4, 61.4, 29.8

L = 61.4

S = 13.6

R = L – S = 61.4 – 13.6 = 47.8

வீச்சுக் கெழு $= \dfrac{L-S}{L+S} = \dfrac{47.8}{75} = 0.64$

**2. ஒரு தரவின் வீச்சு மற்றும் மிகச் சிறிய மதிப்பு ஆகியன முறையே 36.8 மற்றும் 13.4 எனில், மிகப்பெரிய மதிப்பைக் காண்க.** [Hy - 2019]

**தீர்வு:** கொடுக்கப்பட்ட வீச்சு = 36.8 மற்றும்

மீச்சிறு மதிப்பு = 13.4 (S)

மீப்பெரு மதிப்பு L = R + S [∵ வீச்சு = L – S]

= 36.8 + 13.4 = 50.2

**3. கொடுக்கப்பட்ட தரவின் வீச்சைக் காண்க.**

| வருமானம் | 400-450 | 450-500 | 500-550 | 550-600 | 600-650 |
|---|---|---|---|---|---|
| ஊழியர்களின் எண்ணிக்கை | 8 | 12 | 30 | 21 | 6 |

**தீர்வு:** இங்கு மீப்பெரு மதிப்பு = 650

மீச்சிறு மதிப்பு = 400

∴ வீச்சு = L – S = 650 – 400 = 250

**4. ஓர் ஆசிரியர் மாணவர்களை, அவர்களின் செய்முறைப் பதிவேட்டின் 60 பக்கங்களை நிறைவு செய்து வருமாறு கூறினார். எட்டு மாணவர்கள் முறையே 32, 35, 37, 30, 33, 36, 35, 37 பக்கங்கள் மட்டுமே நிறைவு செய்திருந்தனர். மாணவர்கள் நிறைவு செய்த பக்கங்களின் திட்டவிலக்கத்தைக் காண்க.**

**தீர்வு:** நிறைவு செய்ய வேண்டிய மொத்த பக்கங்கள் = 60

32, 35, 37, 30, 33, 36, 310, 35, 37

$\bar{x} \;\dfrac{\Sigma x}{n} = \dfrac{275}{8} = 34.3$

| $x_i$ | $x_i^2$ |
|---|---|
| 32 | 1020 |
| 35 | 1225 |
| 37 | 1369 |
| 30 | 900 |
| 33 | 1089 |
| 36 | 1296 |
| 35 | 1225 |
| 37 | 1369 |
| $\Sigma x_i = 275$ | $\Sigma x_i^2 = 9497$ |

திட்டவிலக்கம்

$$\sigma = \sqrt{\frac{\Sigma x_i^2}{n} - \left(\frac{\Sigma x_i}{n}\right)^2} = \sqrt{\frac{9497}{8} - \left(\frac{275}{8}\right)^2}$$

$$= \sqrt{\frac{9497\times 8 - 275\times 275}{8\times 8}} = \sqrt{\frac{75976-75625}{64}} = \sqrt{\frac{351}{64}}$$

$\sigma = \sqrt{5.48}$

∴ திட்டவிலக்கம் σ = 2.34

**5. 10 ஊழியர்களின் ஊதியம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஊதியங்களின் விலக்க வர்க்கச் சராசரி மற்றும் திட்ட விலக்கம் காண்க. ₹ 310, ₹ 290, ₹ 320, ₹ 280, ₹ 300, ₹ 290, ₹ 320, ₹ 310, ₹ 280.**

**தீர்வு:** ஊதியங்களை ஏறுவரிசையில் எழுத ₹ 280, ₹ 280, ₹ 290, ₹ 290, ₹ 300, ₹ 310, ₹ 310, ₹ 320, ₹ 320.

கூட்டுச் சராசரி $= \dfrac{280+280+290+290+300+310+310+320+320}{9}$

$\bar{x} = \dfrac{2700}{9} = 300$

| $x_i$ | $d_i = x_i - \bar{x} = x_i - 300$ | $d_i^2$ |
|---|---|---|
| 280 | –20 | 400 |
| 280 | –20 | 400 |
| 290 | –10 | 100 |
| 290 | –10 | 100 |
| 300 | 0 | 0 |
| 310 | 10 | 100 |
| 310 | 10 | 100 |
| 320 | 20 | 400 |
| 320 | 20 | 400 |
| | 0 | $\Sigma d_i^2 = 2000$ |

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma d_i^2}{n}} \Rightarrow \sigma = \frac{2000}{9}$

$\sigma = \sqrt{222.222...} = 14.907 = 14.91$

மேலும் $\sigma = \sqrt{222.222}$ எனில்

விலக்க வர்க்கச் சராசரி $\sigma^2 = 222.22$

∴ விலக்க வர்க்கச் சராசரி = 222.22 மற்றும் திட்ட விலக்கம் = 14.91

**6. ஒரு சுவர் கடிகாரம் 1 மணிக்கு 1 முறையும், 2 மணிக்கு 2 முறையும், 3 மணிக்கு 3 முறையும் ஒலி எழுப்புகிறது எனில், ஒரு நாளில் அக்கடிகாரம் எவ்வளவு முறை ஒலி எழுப்பும்? மேலும் கடிகாரம் எழுப்பும் ஒலி எண்ணிக்கைகளின் திட்டவிலக்கம் காண்க.**

**தீர்வு:**

| $x$ | $d = x - \bar{x}$ | $d^2$ |
|---|---|---|
| (1 + 1) = 2 | –11 | 121 |
| (2 + 2) = 4 | –9 | 81 |
| (3 + 3) = 6 | –7 | 49 |
| (4 + 4) = 8 | –5 | 25 |
| (5 + 5) = 10 | –3 | 9 |
| (6 + 6) = 12 | –1 | 1 |
| (7 + 7) = 14 | 1 | 1 |
| (8 + 8) = 16 | 3 | 9 |
| (9 + 9) = 18 | 5 | 25 |
| (10 + 10) = 20 | 7 | 49 |
| (11 + 11) = 22 | 9 | 81 |
| (12 + 12) = 24 | 11 | 121 |
| 156 | | 572 |

$\bar{x} = \frac{\Sigma x}{n} = 13$

$\sigma = \sqrt{\frac{\Sigma d^2}{n}} = \sqrt{\frac{572}{12}} = \sqrt{47.66} \cong 6.9$

**7. முதல் 21 இயல் எண்களின் திட்டவிலக்கத்தைக் காண்க.** [பிடிஏ - 6]

**தீர்வு:** முதல் $n$ இயல் எண்களின் திட்டவிலக்கம்

$= \sqrt{\frac{n^2-1}{12}}$

∴ முதல் 21 இயல் எண்களின் திட்டவிலக்கம்

$= \sqrt{\frac{21^2-1}{12}} = \sqrt{\frac{441-1}{12}} = \sqrt{\frac{440}{12}}$

$= \sqrt{36.66} \cong 6.05$

முதல் 21 இயல் எண்களின் திட்டவிலக்கம் = 6.05

**8. ஒரு தரவின் திட்டவிலக்கம் 4.5 ஆகும். அதில் இருக்கும் தரவுப்புள்ளி ஒவ்வொன்றிலும் 5 ஐ கழிக்க கிடைக்கும் புதிய தரவின் திட்டவிலக்கம் காண்க.**

**தீர்வு:** ஒரு தரவின் திட்டவிலக்கம் 4.5 அதில் இருக்கும் தரவுப்புள்ளி ஒவ்வொன்றிலும் 5 ஐக் கழிப்பதால் புதிய தரவின் திட்டவிலக்கம் மாறுவதில்லை, எனவே புதிய திட்டவிலக்கமும் = 4.5.

**9. ஒரு தரவின் திட்டவிலக்கம் 3.6 ஆகும். அதன் ஒவ்வொரு புள்ளியையும் 3 ஆல் வகுக்கும் போது கிடைக்கும் புதிய தரவின் திட்டவிலக்கம் மற்றும் விலக்கவர்க்க சராசரியைக் காண்க.**

**தீர்வு:** ஒரு தரவின் திட்டவிலக்கம் = 3.6, அதன் ஒவ்வொரு புள்ளியையும் 3 ஆல் வகுக்கும் போது கிடைக்கும் புதிய தரவின் திட்டவிலக்கமும் 3 ஆல் வகுபடும்.

∴ புதிய திட்டவிலக்கம் $\sigma = \frac{3.6}{3} = 1.2$

புதிய விலக்கவர்க்க சராசரி $= \sigma^2 = 1.2^2 = 1.44$

**10. ஒரு வாரத்தில் ஐந்து மாவட்டங்களில் வெவ்வேறு இடங்களில் பெய்த மழையின் அளவானது பதிவு செய்யப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள மழையளவின் தரவிற்கு திட்டவிலக்கம் காண்க.**

| மழையளவு (மி.மீ) | 45 | 50 | 55 | 60 | 65 | 70 |
|---|---|---|---|---|---|---|
| இடங்களின் எண்ணிக்கை | 5 | 13 | 4 | 9 | 5 | 4 |

**தீர்வு:**

| மழையளவு $x_i$ (மி.மீ) | இடங்களின் எண்ணிக்கை $f_i$ | $f_i x_i$ | $d = x - \bar{x}$ | $d_i^2$ | $f_i d_i^2$ |
|---|---|---|---|---|---|
| 45 | 5 | 225 | –11 | 121 | 605 |
| 50 | 13 | 650 | –6 | 36 | 468 |
| 55 | 4 | 220 | –1 | 1 | 4 |
| 60 | 9 | 540 | 4 | 16 | 144 |
| 65 | 5 | 325 | 9 | 81 | 405 |
| 70 | 4 | 280 | 14 | 196 | 784 |
| | N = 40 | $\Sigma x_i f_i = 2240$ | | | $\Sigma f_i d_i^2 = 2410$ |

சராசரி, $\bar{x} = \frac{\Sigma x_i f_i}{N} = \frac{2240}{40} = 56$

∴ திட்டவிலக்கம்

$\sigma = \sqrt{\frac{\Sigma f_i d_i^2}{N}} = \sqrt{\frac{2410}{40}}$

$= \sqrt{60.25} = 7.76$

orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores

10ஆம் வகுப்பு

# அரசு துணைத்தேர்வு, செப்டம்பர் - 2021

பதிவு எண்.

PART - III

## கணிதம் (விடைகளுடன்)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் **நான்கு** பகுதிகளை கொண்டது.

### பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்

(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து, குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **14 × 1 = 14**

**1.** $n(A\times B) = 6$ மற்றும் $A = \{1, 3\}$ எனில், $n(B)$ ஆனது :

(அ) 1 (ஆ) 2 (இ) 3 (ஈ) 6

**2.** 1729 ஐ பகாக் காரணிப்படுத்தும்போது, அந்தப் பகா எண்களின் அடுக்குகளின் கூடுதல் :

(அ) 1 (ஆ) 2 (இ) 3 (ஈ) 4

**3.** $F_1 = 1, F_2 = 3$ மற்றும் $F_n = F_{n-1} + F_{n-2}$ எனக் கொடுக்கப்படின் $F_5$ ஆனது :

(அ) 3 (ஆ) 5 (இ) 8 (ஈ) 11

**4.** $\dfrac{256x^8y^4z^{10}}{25x^6y^6z^6}$ யின் வர்க்கமூலம் :

(அ) $\dfrac{16}{5}\left|\dfrac{x^2z^4}{y^2}\right|$ (ஆ) $16\left|\dfrac{y^2}{x^2z^4}\right|$

(இ) $\dfrac{16}{5}\left|\dfrac{y}{xz^2}\right|$ (ஈ) $\dfrac{16}{5}\left|\dfrac{xz^2}{y}\right|$

**5.** ஒரு நேரிய சமன்பாட்டின் வரைபடம் ஒரு ________ ஆகும்.

(அ) நேர்க்கோடு (ஆ) வட்டம்

(இ) பரவளையம் (ஈ) அதிபரவளையம்

**6.** $a^m, a^{m+1}, a^{m+2}$ ஆகியவற்றின் மீ.பொ.வ. :

(அ) $a^m$ (ஆ) $a^{m+1}$

(இ) $a^{m+2}$ (ஈ) 1

**7.** $\Delta ABC$ யில் $DE \parallel BC$, $AB = 3.6$ செ.மீ, $AC = 2.4$ செ.மீ மற்றும் $AD = 2.1$ செ.மீ எனில், AE யின் நீளம் :

(அ) 1.4 செ.மீ (ஆ) 1.8 செ.மீ

(இ) 1.2 செ.மீ (ஈ) 1.05 செ.மீ

**8.** வட்டத்தின் வெளிப்புறப் புள்ளியிலிருந்து வட்டத்திற்கு எத்தனை தொடுகோடுகள் வரையலாம்?

(அ) ஒன்று (ஆ) இரண்டு

(இ) முடிவற்ற எண்ணிக்கை (ஈ) பூஜ்ஜியம்



orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or
Availablve at All Leading Bookstores



**9.** $(-5, 0), (0, -5)$ மற்றும் $(5, 0)$ ஆகிய புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு :

(அ) 0 ச.அலகுகள் (ஆ) 25 ச.அலகுகள்

(இ) 5 ச.அலகுகள் (ஈ) எதுவுமில்லை

**10.** $(0, 0), (1, 0)$ மற்றும் $(0, 1)$ என்ற புள்ளிகளை முனைகளாகக் கொண்ட முக்கோணத்தின் சுற்றளவு :

(அ) $\sqrt{2}$ (ஆ) 2 (இ) $2 + \sqrt{2}$ (ஈ) $2 - \sqrt{2}$

**11.** ஒரு கோபுரத்தின் உயரத்திற்கும் அதன் நிழலின் நீளத்திற்கும் உள்ள விகிதம் $\sqrt{3} : 1$ எனில், சூரியனைக் காணும் ஏற்றக் கோண அளவானது :

(அ) $45^o$ (ஆ) $30^o$ (இ) $90^o$ (ஈ) $60^o$

**12.** ஆரம் 5 செ.மீ மற்றும் சாயுயரம் 13 செ.மீ உடைய நேர் வட்டக் கூம்பின் உயரம் :

(அ) 12 செ.மீ (ஆ) 10 செ.மீ (இ) 13 செ.மீ (ஈ) 5 செ.மீ

**13.** ஓர் அரைக்கோளத்தின் மொத்தப் பரப்பு அதன் ஆரத்தினுடைய வர்க்கத்தின்__________மடங்காகும்.

(அ) $\pi$ (ஆ) $4\pi$ (இ) $3\pi$ (ஈ) $2\pi$

**14.** ஒரு புத்தகத்திலிருந்து சமவாய்ப்பு முறையில் ஒரு பக்கம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்தப் பக்க எண்ணின் ஒன்றாம் இட மதிப்பானது 7 ஐ விடக் குறைவாக இருப்பதற்கான நிகழ்தகவானது :

(அ) $\frac{3}{10}$ (ஆ) $\frac{7}{10}$ (இ) $\frac{3}{9}$ (ஈ) $\frac{7}{9}$

## பகுதி - II

**குறிப்பு : எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28 க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும்.

**$10 \times 2 = 20$**

**15.** $A = \{1, 3, 5\}$, $B = \{2, 3\}$ எனில் $n(A \times B) = n(A) \times n(B)$ எனக் காட்டுக.

**16.** $A = \{1, 2, 3, 4, ..., 45\}$ மற்றும் R என்ற உறவு "A -யின் மீது, ஓர் எண்ணின் வர்க்கம்" என வரையறுக்கப்பட்டால் R -ஐ $A \times A$ -யின் உட்கணமாக எழுதுக. மேலும் R -க்கான மதிப்பகத்தையும், வீச்சகத்தையும் காண்க.

**17.** 3, 6, 9, 12, ...., 111 என்ற கூட்டுத்தொடர் வரிசையில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கையைக் காண்க.

**18.** $3 + k, 18 - k, 5k + 1$ என்பவை ஒரு கூட்டுத்தொடர் வரிசையில் உள்ளன எனில், $k$ யின் மதிப்பு காண்க.

**19.** மூலங்களின் கூடுதல் மற்றும் பெருக்கற்பலன் $-9$ மற்றும் 20 எனில், இருபடிச் சமன்பாடுகளைக் காண்க.

**20.** $15x^2 + 11x + 2 = 0$ என்ற இருபடிச் சமன்பாட்டின் மூலங்களின் தன்மையைக் காண்க.

**21.** $\Delta ABC$ யின் பக்கங்கள் AB மற்றும் AC யின் மீதுள்ள புள்ளிகள் முறையே D மற்றும் E ஆனது $DE \parallel BC$ என்றவாறு அமைந்துள்ளது. $\frac{AD}{DB} = \frac{3}{4}$ மற்றும் $AC = 15$ செ.மீ. எனில், AE யின் மதிப்பு காண்க .

**22.** $(-3, -4), (7, 2)$ மற்றும் $(12, 5)$ ஆகிய புள்ளிகள் ஒரு கோடமைந்தவை எனக்காட்டுக.

**23.** $8x - 7y + 6 = 0$ என்ற கோட்டின் சாய்வு மற்றும் $y$ வெட்டுத்துண்டு ஆகியவற்றைக் கணக்கிடுக.

**24.** $3x - 2y - 6 = 0$ என்ற நேர்கோடு ஆய அச்சுகளின் மேல் ஏற்படுத்தும் வெட்டுத் துண்டுகளைக் காண்க.

**25.** $10\sqrt{3}$ மீ உயரமுள்ள கோபுரத்தின் அடியிலிருந்து 30 மீ தொலைவில் தரையில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து கோபுரத்தின் உச்சியின் ஏற்றக் கோணத்தைக் காண்க.

**26.** உயரம் 2 மீ மற்றும் அடிப்பரப்பு 250 ச.மீ. கொண்ட ஓர் உருளையின் கன அளவைக் காண்க.

**27.** ஒரு பகடை உருட்டப்படும் அதே நேரத்தில் ஒரு நாணயமும் சுண்டப்படுகிறது. பகடையில் ஒற்றைப்படை எண் கிடைப்பதற்கும், நாணயத்தில் தலை கிடைப்பதற்குமான நிகழ்தகவைக் காண்க.

**28.** இரு நேர்வட்டக் கூம்பின் உயரங்களின் விகிதம் $1 : 2$ மற்றும் அவற்றின் அடிப்பக்கச் சுற்றளவின் விகிதம் $3 : 4$ எனில், அவற்றின் கன அளவுகளின் விகிதம் காண்க.

orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



## பகுதி - III

**குறிப்பு : எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். **42** க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும்.

**10 × 5 = 50**

**29.** $A=\{x \in W \mid x < 2\}$, $B = \{x \in N \mid 1 < x \leq 4\}$ மற்றும் $C = \{3, 5\}$எனில் $A \times (B \cap C) = (A \times B) \cap (A \times C)$ என்பதனைச் சரிபார்க்கவும்.

**30.** ஒரு கூட்டுத் தொடர் வரிசையில் அமைந்த அடுத்தடுத்த மூன்று உறுப்புகளின் கூடுதல் 27 மற்றும் அவற்றின் பெருக்கற்பலன் 288 எனில், அந்த மூன்று உறுப்புகளைக் காண்க.

**31.** 396, 504, 636 ஆகியவற்றின் மீ.பொ.வ காண்க.

**32.** தீர்க்க : $x + y + z = 5$; $2x - y + z = 9$; $x - 2y + 3z = 16$.

**33.** $64x^4 - 16x^3 + 17x^2 - 2x + 1$ என்பதன் வர்க்கமூலம் காண்க.

**34.** பிதாகரஸ் தேற்றத்தை எழுதி, நிறுவுக.

**35.** ஒரு முக்கோணத்தின் நடுக்கோடுகள் ஒரு புள்ளி வழிச் செல்லும் எனக் காட்டுக.

**36.** A(6, 2) B(–5, –1) மற்றும் C(1, 9) -ஐ முனைகளாகக் கொண்ட $\Delta ABC$ யின் முனை A யிலிருந்து வரையப்படும் நடுக்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.

**37.** P(–1, –4), Q($b$, $c$) மற்றும் R(5, –1) என்பன ஒரே நேர்க்கோட்டில் அமையும் புள்ளிகள் என்க. மேலும் $2b + c = 4$ எனில் $b$ மற்றும் $c$ -யின் மதிப்பு காண்க.

**38.** இரு கப்பல்கள் கலங்கரை விளக்கத்தின் இரு பக்கங்களிலும் கடலில் பயணம் செய்கின்றன. இரு கப்பல்களிலிருந்து கலங்கரை விளக்கத்தின் உச்சியின் ஏற்றக்கோணங்கள் முறையே $30^\circ$ மற்றும் $45^\circ$ ஆகும். கலங்கரை விளக்கத்தின் உயரம் 200 மீ எனில், இரு கப்பல்களுக்கும் இடையே உள்ள தொலைவைக் காண்க. ($\sqrt{3} = 1.732$).

**39.** 45 செ.மீ உயரமுள்ள ஓர் இடைக்கண்டத்தின் இரு புற ஆரங்கள் முறையே 28 செ.மீ மற்றும் 7 செ.மீ. எனில், இடைக் கண்டத்தின் கன அளவைக் காண்க.

**40.** ஓர் உருளையின் மீது ஓர் அரைக்கோளம் இணைந்தவாறு உள்ள ஒரு பொம்மையின் மொத்த உயரம் 25 செ.மீ. ஆகும். அதன் விட்டம் 12 செ.மீ. எனில், பொம்மையின் மொத்தப் புறப்பரப்பைக் காண்க.

**41.** இரண்டு பகடைகள் உருட்டப்படுகின்றன. கிடைக்கப் பெறும் முக மதிப்புகளின் கூடுதல் (i) 4 –க்குச் சமமாக (ii) 10 –ஐ விட அதிகமாக (iii) 13 –ஐ விடக் குறைவாக இருப்பதற்கான நிகழ்தகவு காண்க.

**42.** சமன்பாடு $(1 + m^2)\, x^2 + 2mcx + c^2 - a^2 = 0$ –ன் மூலங்கள் சமம் எனில் $c^2 = a^2\,(1 + m^2)$ என நிறுவுக.

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2 × 8 = 16**

**43.** (அ) PQ = 4.5 செ.மீ, $\angle R=35^\circ$ மற்றும் உச்சி R -லிருந்து வரையப்பட்ட நடுக்கோட்டின் நீளம் RG = 6 செ.மீ என அமையுமாறு $\Delta PQR$ வரைக.

(அல்லது)

(ஆ) 6 செ.மீ விட்டமுள்ள வட்டம் வரைந்து வட்டத்தின் மையத்திலிருந்து 8 செ.மீ தொலைவில் P என்ற புள்ளியைக் குறிக்கவும். அப்புள்ளியிலிருந்து PA மற்றும் PB என்ற இரு தொடுகோடுகள் வரைந்து அவற்றின் நீளங்களை அளவிடுக.

**44.** (அ) $x^2 + x - 12 = 0$ என்ற சமன்பாட்டின் வரைபடம் வரைந்து, தீர்வின் தன்மையைக் கூறுக.

(அல்லது)

(ஆ) $y = x^2 + 3x - 4$ -யின் வரைபடம் வரைந்து, அதனைப் பயன்படுத்தி $x^2 + 3x - 4 = 0$ என்ற சமன்பாட்டினைத் தீர்க்கவும்.

*****

orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Availablve at All Leading Bookstores



## விடைகள்

### பகுதி - I

1. (இ) 3
2. (இ) 3
3. (ஈ) 11
4. (ஈ) $\begin{vmatrix} 16 & xz^2 \\ 5 & y \end{vmatrix}$
5. (அ) நேர்க்கோடு
6. (அ) $a^m$
7. (அ) 1.4 செ.மீ
8. (ஆ) இரண்டு
9. (ஆ) 25 ச.அலகுகள்
10. (இ) $2+\sqrt{2}$
11. (ஈ) $60^o$
12. (அ) 12 செ.மீ
13. (இ) $3\pi$
14. (ஆ) $\frac{7}{10}$

### பகுதி - II

15. $A = \{1, 3, 5\}$ $B = \{2, 3\}$

$n(A) = 3;\ n(B) = 2$

$\therefore\ n(A) \times n(B) = 3 \times 2 = 6$ ...(1)

$A \times B = \{(1, 2)\ (1, 3)\ (3, 2)\ (3, 3)\ (5, 2)\ (5, 3)\}$

$\therefore\ n(A \times B) = 6$ ...(2)

(1) மற்றும் (2) -லிருந்து கிடைப்பது

$n(A \times B) = n(A) \times n(B)$

16. கொடுக்கப்பட்ட $A = \{1, 2, 3, 4, \ldots 45\}$

$\therefore A \times A = \{(1, 1)\ (1, 2)\ (1,3) \ldots (1, 45)\ (2, 1)\ (2, 2) \ldots (2, 45)\ (45, 1)\ (45, 2)\ (45, 3) \ldots (45, 45)\}$ ... (1)

R ஓர் எண்ணின் வர்க்கம் என வரையறுக்கப்படுகிறது.

$\therefore R = \{(1,1)\ (2,4)\ (3,9)\ (4,16)\ (5, 25)\ (6,36)\}$... (2) [$\because$ 1இன் வர்க்கம் 1, 2 இன் வர்க்கம் 4 மற்றும் பிற]

(1) மற்றும் (2)லிருந்து, $A \times A$ இன் உட்கணம் R ஆகும்.

$\therefore R \subset A \times A$

R க்கான மதிப்பகம் = {1, 2, 3, 4, 5, 6}

[(2)ல் உள்ள எல்லா வரிசை சோடிகளின் முதல் உறுப்பு]

R இன் வீச்சகம் = {1, 4, 9, 16, 25, 36} [(2)ல் உள்ள எல்லா வரிசை சோடிகளின் இரண்டாம் உறுப்பு]

17. முதல் உறுப்பு $a = 3$; பொது வித்தியாசம்

$d = 6 - 3 = 3$; கடைசி உறுப்பு $l = 111$

$n = \left(\frac{l-a}{d}\right)+1$ என நாம் அறிவோம்.

$n = \left(\frac{111-3}{3}\right)+1 = 37$

எனவே, இந்தக் கூட்டுத் தொடர் வரிசையில் 37 உறுப்புகள் உள்ளன.

orders@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.CBSEtips.in

2022-23 EDITION

SURA'S 10TH STD SCHOOL GUIDES




Updated New Edition

Call @
9600175757
8124301000
orders@surabooks.com

Buy Online @ surabooks.com

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com